**STC 11 /2023** 09.10.2023

**PW.1. அய்யர் த.பெ. சின்னாத்தேவர்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** எதிரியின் கணவர் மச்சராஜா எனக்கு துாரத்து உறவினர் கிடையாது என்றால் சரியல்ல, துாரத்து உறவினர் மற்றும் பழக்க வழக்க நண்பர் ஆவார். எதிரியின் கணவர் எனது தாய் அல்லது தந்தை வழிமுறையில் உறவினரா என்றால் அவ்வாறு சொல்ல இயலாது. எனக்கு சொந்தஊர் அம்மமுத்தன்பட்டி ஆகும். மச்சராஜா மற்றும் எதிரிக்கு சொந்தஊர் குருவிலாம்பட்டி ஆகும். மச்சராஜாவின் பெற்றோர் பெயர் தெரியுமா என்றால் தெரியும், தற்போது ஞாபகம் இல்லை. மச்சராஜாவின் உடன்பிறந்த சகோதரர் மற்றும் சகோதரிகள் பெயர் தெரியுமா என்றால் சகோதரர்கள் பெயர் தனிக்கொடி மற்றும் யோக்கியம் ஆகும். மச்சராஜாவின் சகோதரர்கள் பெயர் நான் சொல்வது போல் கிடையாது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக தொகை அதிகாம இருக்கும்பட்சத்தில் கடனாக கொடுக்கும்போது பொறுப்பிற்காக புரோ நோட் எழுதிவாங்குவதும் நிலத்சொத்தின் ஆவணங்களை வாங்கி வைப்பது வழக்கத்தில் உள்ளது என்றால் நான் நம்பிக்கையின் பெயரில் தான் எதிரிக்கு கொடுத்தேன். மச்சராஜா மற்றும் எதிரிக்கு இதற்கு முன்பு பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரிதான். மச்சராஜா மற்றும் எதிரி இருவரும் அரசு பணியில் இல்லை என்றால் சரிதான்.

2. மச்சராஜா மற்றும் எதிரி பெயரில் நிலசொத்து உள்ளதா என்றால் இருப்பதாக சொன்னார்கள், பிரிவினை ஆகாத சொத்துக்கள் வைத்துள்ளார்கள். மேற்படி பிரிவினை இல்லாத சொத்துக்கள் உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் வேண்டுமானால் தாக்கல் செய்கிறேன். அரசு சார்பு ஆய்வாளராக இருந்து விருப்ப ஓய்வு பெறும்போது எனக்கு பணிஓய்வு பலன்களான ரூபாய் 35 லட்சம் தொகையை எனது வங்கி கணக்கில் கொஞ்சம் கொஞ்சமாக செலுத்தி வரவு வைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பணம் உசிலம்பட்டி எஸ்பிஐ வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பணத்தில் இருந்து தான் மச்சராஜா மற்றும் எதிரிக்கு கடனாக கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் ரூபாய் 12 லட்சத்தை எனது வங்கி கணக்கில் இருந்து எடுத்தேன் என்றால் ஒரே

தவணையில் எடுக்கவில்லை, தனித்தனியாக எடுத்து எனது வீட்டில் வைத்திருந்தில் இருந்து கொடுத்தேன். எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை எனது கணக்கில் இருந்து எடுத்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை, ஸ்டேட்மெண்டை பார்த்தால் தெரியும். எனது வங்கி கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 03.04.2021ம் தேதி முதல் 16.04.2021ம் தேதி வரை எனது வங்கி கணக்கில் எதிரி கேட்டதாக சொல்லும் பணம் ரூபாய் 12 லட்சத்தை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, எடுத்துள்ளேன். நான் பணம் கொடுத்த ஒரு வருடம் காலம் கழித்து திரும்ப எந்த தேதியில் கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அக்டோபர் இறுதியில் கேட்டதாக சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் அக்டோபர் இறுதியில் எதிரி மற்றும் அவரது கணவரிடம் பணம் எதுவும் கேட்கவில்லை என்றும் உண்மையாக இருந்தால் தேதியை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் எதிரி மற்றும் அவரது கணவர் ஒரு மாதத்தில் வங்கியில் கடன் கிடைத்துவிடும் என்று சொன்னதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி வங்கியில் கடன் பணம் கிடைத்தவுடன் எனது வங்கி கணக்கில் வரவு வைத்துவிடுவேன் அதன்பின்பு காசோலையை கலெக்சனுக்கு போடுமாறு என்னிடம் எதிரி கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராஜாங்கம் என்பவர் என் ஊரை சேர்ந்தவர், அவர் தற்போது இறந்துவிட்டார், அவரது மகன்களை எனக்கு தெரியும். எனக்கு வழங்கிய காசோலையில் பின்னிட்ட தேதியாக 30.11.2022ம் தேதியிட்டு கொடுத்ததாக நான் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எதிரியும் அவரது கணவரும் என்னிடம் ரூபாய் 12 லட்சம் 16.04.2021ம் தேதி வாங்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக எதிரியானவர் ஐசிஐசிஐ வங்கி காசோலையை ம.சா.ஆ.1ஐ எனக்கு பின்தேதியிட்டு வழங்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 16.04.2021ம் தேதி ரூபாய் 12 லட்சம் பணத்தை எதிரி மற்றும் அவரது கணவரிடம் கொடுக்கும்போது எனது மனைவி ரஞ்சிதமும் உடன் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி ரஞ்சிதம் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழிலை உரிமம் இல்லாமல் செய்து வருகிறார்

என்றால் எனக்கு தெரியாது, என் மனைவிக்கு தான் தெரியும். எனக்கு குலதெய்வம் மானூத்துபெத்தனசாமி என்றால் சரிதான். எனது மனைவி பேச்சியம்மாள் என்ற பிரனவிதக்சா என்ற பேரில் சீட்டுபணம் சிறுசேமிப்பாக உறுப்பினர்களை சேர்த்து ரூபாய் 2 லட்சம், ரூபாய் 4 லட்சம் மற்றும் ரூபாய் 6 லட்சம் என்ற வகையில் சீட்டு நடத்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது, என் மனைவிக்கு தான் தெரியும். மேற்படி சீட் பண்டில் எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜாங்கம் மற்றும் அவரது மகன்கள் சரத், ராஜ்குமார் ஆகியோர்கள் மூலம்தான் எதிரியானவர் எனது மனைவி நடத்தும் சீட் குரூப்பில் உறுப்பினராக சேர்ந்தார் என்றால் அது பற்றி என் மனைவியிடம் தான் கேட்க வேண்டும்.

4. மேற்படி என் மனைவி நடத்தி வரும் சீட் குரூப்பில் எதிரியானவர் 01.08.2021ம் தேதி ரூபாய் 2 லட்சத்திற்கான சீட் சேர்ந்து பணம் கட்டி வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது, என் மனைவிடம் தான் கேட்க வேண்டும். மேற்படி சீட் பணம் உறுப்பினராக சேரும்போது பொறுப்பிற்கு எதிரியின் கையொப்பம் இட்ட புரோநோட் ஒன்றும் ஐசிஐசிஐ அல்லிகுண்டம் வங்கியின் எதிரியின் வங்கி கணக்கிற்கு உரிய 000106 என்ற காசோலையை கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தார் என்று சொன்னால் அந்த காசோலையை எதிரி தொகையை நிரப்பி கையெழுத்து போட்டு என்னிடம் தான் கொடுத்தார், என் மனைவியிடம் கொடுக்கவில்லை. மேற்படி சீட் குரூப்பில் 20.09.2022ம் தேதி 14வது தவணையாக சீட் பணம் செலுத்தி வரும்பட்சத்தில் எதிரியானவர் மேற்படி ஏலசீட்டினை ஏலத்திற்கு எடுத்தார் என்றால் எனக்கு தெரியாது, எனது மனைவியிடம் தான் கேட்கவேண்டும். தொடர்ந்து எதிரியானவர் 17 முதல் 20 மாத தவணையை பாக்கி வைத்ததால் மேற்படி எனது மனைவியானவர் எதிரி என் மனைவியிடம் கொடுத்த மேற்படி காசோலையை என்னிடம் கொடுத்து என் பெயரில் மேற்படி காசோலையை தொகை மற்றும் தேதியை நிரப்பி என் வங்கி கணக்கில் கலெக்சனுக்கு போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இதற்கு பின்பு மேற்படி காசோலை சம்பந்தமாக 13.12.2022ம் தேதி வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதை அறிந்து எதிரியானவர் மேற்படி சீட்டு பணத்திற்குரிய நான்குமாத தவணை பணமான ரூபாய் 42000ஐ என் மனைவியிடம் கொடுத்து கணக்கை சரிசெய்தார் என்றும் என் மனைவியும் மேற்படி எதிரியிடம் பொறுப்பிற்காக வாங்கிய காசோலையை கொடுத்துவிட்டு ஐசிஐசிஐ வங்கிக்குரிய

காசோலையை என் கணவரிடம் இருந்து வாங்கி தருவதாக கூறினார் என்றும் ஆனால் நான் மறுத்துவிட்டு எதிரியிடம் அதிக தொகை பெறவேண்டும் என்பதற்காக சட்டநிலைக்கு புறம்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் மச்சராஜாவை இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை என்றால் ˙சரிதான். 16.04.2021ம் தேதி என்னிடம் எதிரியும் அவரது கணவரும் ரூபாய் 12 லட்சம் கடனாக வாங்கியது உண்மை என்றால் மேற்படி மச்சராஜாவை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்திருப்பேன் என்றும் பொய் என்பதால் தான் மேற்படி மச்சராஜாவை எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் எதுவும் நேரடியாக வாங்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக மேற்படி ம.சா.ஆ.1ஐ பொறுப்பிற்கு கொடுக்கவில்லை என்றும் எனது மனைவி ரஞ்சிதத்திடம் எதிரி பொறுப்பிற்காக கொடுத்த மேற்படி காசோலையை நான் தவறாக நிரப்பி வங்கியில் கலெக்சனுக்கு போட்டுள்ளேன் என்றும் இதனால் எதிரி சட்டப்படி தவறு எதுவும் செய்யவில்லை என்றும் என் மனு சட்டப்படி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

S.d./ Ayyar
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.